ஏ.கோ.எண்.1027 25/11/08

செய்தி வெளியீடு

உயர்ரக அரிசியின் விலை குறைக்கப்படும்.
மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் முன்னிலையில்
அரிசி ஆலை உரிமையாளர்களின் சம்மேளனம் உறுதிமொழி

*************

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகக் கூட்ட அரங்கில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரிசி விலை உயர்வு குறித்து மொத்த அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் இன்று (25.11.2008) காலை 11.00 மணிக்கு ஆய்வு செய்தார்கள்.

அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் மற்றும் நெல், அரிசி மொத்த வியாபாரிகள் சங்கங்களின் கூட்டத்தை துவக்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில், ஏழை எளிய மக்கள் பசியின்றி வாழ வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தினை 1.87 கோடி குடும்பங்கள் பயனடையும் வகையில் செயல்படுத்த ஆணையிட்டார்கள். மேலும், அரிசி ஆலைகளுக்கு தங்குதடையின்றி நெல் கிடைக்க வேண்டும், விவசாயிகள் கூடுதலாக நெல்லை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் வழங்கப்படாத அளவிற்கு சாதாரண ரக நெல்லுக்கு ரூ.100/-ம், சன்னரக நெல்லுக்கு ரூ.120/-ம் தமிழக அரசால் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

ஏழை எளிய மக்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மாதம் ஒன்றுக்கு சுமார் 3 லட்சம் மெ.டன் அரிசி வழங்கப்படுகிறது. வெளி மார்க்கெட்டில் உயர்ரக அரிசியின் விலையை மின்வெட்டினை காரணம்



/2

காட்டி அரிசி வியாபாரிகள் உயர்த்தக்கூடாது. பாமர மக்கள் மட்டுமல்ல. அனைத்துப் பிரிவினரும் நியாயமான விலையில் அரிசி வாங்க வழிவகை செய்யப்பட வேண்டும். பொது மக்களுடைய வருமானத்தில் 55 சதவீதத்தை உணவுக்காக செலவிடுகிறார்கள். அவர்களுடைய வருமானத்தில் பெரும் பகுதியை உணவுக்காக செலவிடுவதால் தற்போதைய உயர்ரக அரிசியின் விலை கூடுதலாகி விட்டது என்றும், அரசு அரிசியின் விலையை நியாயமான விலைக்கு குறைக்க வேண்டும் என்றும் கருதுகிறார்கள். அரிசி ஆலைகள் அரசின் கோரிக்கையினை ஏற்று நிச்சயம் விலையை குறைக்க முன் வரும் என்றும், பொது மக்களின் நலன் கருதி அரசு மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள தூண்டுகோலாகி விடக் கூடாது என்று தெரிவித்தார்கள்.

அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத் தலைவர் திரு. துளசிங்கம் அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும், அரிசி விலை இயன்ற வரை குறைக்கப்படும் என்றும் உறுதியளித்தார்கள்.

தமிழ்நாடு அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத் தலைவர் திரு. துளசிங்கம், மற்றும் செயலாளர் திரு. சின்னசாமி ஆகியோர் அவர்களுடைய சங்க கோரிக்கைகளை எடுத்துரைத்தனர். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அரிசி ஆலை உரிமையாளர்களின் நியாயமான கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வேன் என்றும் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் திரு.கே.சண்முகம், இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு.கே.ராசாராம், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சத்ய பிரத சாகு, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
செயலகம்,